1979 ஏப்ரல் 30]

மெகா வாட் கிடைத்த இடத்திலே, 100 மெகா வாட்கூட கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக நெய்வேலி நிர்வாகத்தோடு அரசு தொடர்பு கொண்டது. போதுமான அளவுக்கு நிலக்கரி இல்லை என்கிறார்கள். இருந்தாலும் இந்த கோடை காலத்தில் நெய்வேலி இப்படி நம்மை கைவிடக் கூடாது.

திரு. இரா. அமிர்தராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, உடன்குடி பகுதி வெற்றிலை சங்கத் தலைவர் அவர்கள் ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்கள். 24 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதி வரை மின்சாரம் அங்கே கொடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அதுபற்றி கவனிக்கப்படும்.

சென்னையில் உள்ள காமதேனு, சிந்தாமணி சிறப்பங்காடிகள்.

*வினா எண். 875 திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள காமதேனு, சிந்தாமணி ஆகிய சிறப்பங்காடிகளுக்கான 1975 முதல் 1977 மார்ச்சு முடிய உள்ள கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் அறிக்கை சபையில் வைக்கப்படுமா?

(இ) இந்தச் சிறப்பங்காடிகளில் ஐவுளி கொள்முதலுக்கென தனியே குழு ஏதும் அமைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) சென்னையில் காமதேனு சிறப்பங்காடியின் கணக்குகள் தணிக்கை கூட்டுறவு ஆண்டு 1975–76-க்கு முடிக்கப்பட்டுள்ளது. 1976–77-க்கான தணிக்கை நடந்து கொண்டு இருக்கிறது.

சிந்தாமணி சிறப்பங்காடியின் 1975-76-க்கான தணிக்கை முடியும் தருவாயிலுள்ளது. 1976–77-க்கு தணிக்கை நடந்து கொண்டிருக்கிறது.

(ஆ) தனிப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை அறிக்கைகள் சபை முன் வைக்கப்படுவது வழக்கமல்ல. அவை சட்ட அவைகளின் நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

(இ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், 1975–76ஆம் ஆண்டுக்கு மட்டிலுமே தணிக்கை செய்யப்பட்டுள்ளது என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதற்குமேல் தணிக்கை செய்யப்படாததற்குக் காரணம் என்ன ? போதுமான அளவுக்கு தணிக்கை அதிகாரிகள் இல்லையா ? அப்படியில்லை என்று சொன்னால், போதுமான அளவுக்கு தணிக்கை அதிகாரிகள் நியமிக்கப்படுவார்களா ? இப்படி பல ஆண்டு காலமாக தணிக்கை செய்யப்படாமல இருப்பதன் காரணமாக பல ஊழல்கள் மூடி மறைக்கப்படுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலை உண்டாகிறது. எனவே, அதற்கான ஏற்பாடுகளை உடனடியாக அமைச்சர் அவர்கள் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தணிக்கை காலம் காலதாமதமாவதால்' உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், இதிலே சில முறை கேடுகள் ஏற்படுகின்றன. இவைகள் அரசின் கவனத்திற்கு வந்து, அதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

வருவாய்த்துறை ஆய்வாளர்களுக்கு வீடுகள்

*வினா எண். 876—திரு ஏ. எம், பரமசிவம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வருவாய்த்துறை ஆய்வாளர்களுக்கு இதற்கு முன்னர் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இம்மாநிலத்தின் பல மாவட்டங்களிலுமுள்ள வருவாய் ஆய்வாளர்களுக்கு ரூபாய் 110 இலட்ச மதிப்பீட்டில் படிப் படியாக மூன்றாண்டுகளில் 1978–79-ல் 44 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 200 குடியிருப்புகள் 1979–80-ல் 33 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 150 குடியிருப்புகள் 1980–81-ல் 33 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 150 குடியிருப்புகள் கட்டிட, வகை செய்யும் விதத்தில் வீட்டு வசதி மற்றும் நகர முன்னேற்றத் துறையில் ஆணை பிறப்பிக்கப்பட்டு, இவ் வாண்டுக்கான பணி நடந்து வருகின்றது.

திரு. அ. மா. பரமசிவன் : பிர்க்கா மையங்களில் வருவாய்த் துறை ஆய்வாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா ?